Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**C.C.No. 177/2022**

**Deposition of PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :ராஜசுந்தரம் | ஜாதி | : |
| த/பெ | :ராஜ் | தொழில் | : டிரைவர் |
| கிராமம் | : கீழதிப்பம்பட்டி | சமயம் | : |
| தாலுகா | :ஆத்தூர் | வயது | : 34/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.03.2024.

(Accused A1 to A2 present.)

முதல் விசாரணை

நான் கீழதிப்பம்பட்டியில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும் அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்த ான். கடந்த 01.01.2022 அன்று நானும், எனது ஓனரான அ.சா.2உம், அ.சா.2இன் வீட்டில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அ.சா.1 வீட்டில் சத்தம் கேட்டது உடனே நாங்கள் சென்று பார்த்தபோது எதிரி பால்பாண்டி அங்கு சத்தம்போட்டு கொண்டு இருந்தார். அப்போது அ.சா.1ஐ எதிரி கீழே தள்ளிவிட்டிருந்தார். உடனே நாகங்கள் பால்பாண்டியை சத்தம்போட்டு விலக்கி அனுப்பி வைத்தோம். பின்பு ஊர்காரர்கள் பேசிவிட்டு காவல்நிலையத்திற்கு சென்றார்கள். பின்பு எங்களை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். நாங்கள் காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்தை கூறினோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.1 புகார் தாரர் எனது பெரியப்பா என்றால் சரிதான் நானும் எனது ஓனரும் வீட்டில் பேசிக்கொண்டிருந்த விபரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நாங்கள் போகும்போது சத்தம்போட்டு கொண்டிருந்தார்கள். என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். ஊர்க்காரர்கள் என்ன பேசிகொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. புகாரில் என்ன எழுதியிருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அ.சா.1 வீட்டிற்கும் எனது ஓனர் வீட்டிற்கும் 5, 6 வீடுகள் தள்ளி இருக்கும். நானும், ராஜாவும் 12.00 மணியளவில் காவல்நிலையம் சென்றோம் அப்போது போலீசார் விசாரித்தது தான் அதன்பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.அ.சா.1க்கும், எதிரிகளுக்கும், ஆறுமுகத்திற்கும் உள்ள பிரச்சனை என்னசென்று எனக்கு தெரியாது. நான் முதல் விாசரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் புகார்தாரர் எனக்கு பெரியப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/.P.Jaisankar,
District Munisf Cum Judicial Magistrate,
Athoor.